[19th October 1964

திரு. ம. கமலநாதன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'அகேஷனல்' என்று சொன்னர்கள். ஆனல் ஜெனரலாக அவ்வாறு உள்ளது. பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை அரசாங்கம் உணர்ந்து, அம்மாதிரி செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர். சில பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்குத் தனிப்பட்ட பள்ளிகள் மீது அவ்வளவு அனுதாபம் இல்லை. இதை சில பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்றுக் கொள்ளலாம். ஆனல் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல இது. ஆனல் இம்மாதிரி எந்தப் புகார் வந்தாலும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் தெரிவிக்கலாம். அரசாங்கம் அதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

பொறியியல் பட்டப்படிப்பில் மாணவர்களின் தேர்ச்சியின்மை

*25 கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் பொறியியற் கல்லூரிகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டுப் படிப்பு மேற்கொண்ட மாணவரிடையே தேர்ச்சியின்மை உண்டாவதற்கான காரணங்களை ஆராய்ந்து காணுதல் வேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழு செய்த பரிந்துரையைச் செயற்படுத்த அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter has been examined and it has been found that the performance of students of the six Engineering Colleges under the control of the Director of Technical Education in the Final B.E. examination has been steadily improving in the past five years.

இந்த விஷயம் பரிசிலனை செய்யப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில் தொழில் நுட்பக் கல்வி நெறியாளரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆறு பொறியியற் கல்லூரிகளின்மாணவர்கள் பி. ஈ. இறுதி யாண்டுப் பரீட்சையில் காட்டிய தேர்ச்சி படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்கிறது என்று தெரியவருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : அவர்களுடைய தகுதியை அதிகப்படுத்துவதற்குச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி அதற்கு அமைச்சர் அவர்கள் விடை அளிப்பாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை. டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் இதைக் கவனித்துக் கொண்டு வருகிறார். அவர்கள் கவனிப்பதால்தான் இப்பொழுது நிலைமை அபிவிருத்தி ஆகியிருக்கிறது என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

19th October 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: அபிவிருத்தி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதற்குக் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு புள்ளிவிவரம் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆறு கல்லூரிகள் தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகள். 1961-62-ல் 65% பாஸ், 1962-63-ல் 69% பாஸ், 1963-64-ல் 81% பாஸ். இதிலிருந்து நிலைமை அபிவிருத்தி ஆகியிருக்கிறது என்பது தெரிய வருகிறது.

திரு. வை. சங்கரன்: பொறியியல் கல்லூரிகளை இன்றைக்கு உள்ள நவீன முறைக்கு ஏற்றபடி மாற்றி அமைக்காத காரணத்தினால், ஓரளவுக்குத் தரம் குறைவாக இருக்கிறது. ஐ.ஏ.எஸ். போன்ற காம்பெடிஷன் பரீட்சைகளில் தென் பகுதியில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் தேர்வு குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, நவீன முறைகளுக்கு ஏற்றபடி கல்லூரிகளை மாற்றி அமைத்து, தரத்தை அதிகரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பொறி இயல் கல்லூரிகளில், இந்த மாநிலத்தில், தரம் குறைவாக இருக்கிறது என்பதை நான் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அரசாங்கக் கல்லூரிகளில் இந்த அபிவிருத்தி எந்த அளவுக்கு இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றித் தனிக் கேள்வி கேட்டால் விவரங்கள் கொடுக்கலாம்.

Engineering College for Salem District

* 26 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the proposal to locate an Engineering College in Salem District; and

(*b*) the present stage of the proposal and when the College would start functioning?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The College will be located at a site on the Salem-Omalur main road at a distance of seven miles from Salem Town.

(*b*) Acquisition of a considerable portion of the site is already over. Administrative approval has been accorded for the building and water supply schemes and a Special Construction Division has also been sanctioned for executing the works. The College will start functioning from the academic year 1965–66.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சேலம் என்ஜினியரிங் கல்லூரியும், பொதுவாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட இருந்த மற்ற என்ஜினியரிங் கல்லூரிகளும் எந்த நிலையில் இருக்கின்றன?